IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஐங்குறுநூற்றில் ஐந்திணைகளின் சிறப்பு

**நெறியாளர்**
**முனைவர் கோ. பவானி**
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வாளர்**
**பா. ஜெயலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

சங்க இலக்கியம் அகம், புறம் என இரண்டாகப் பிரித்து தமிழர்களின் வாழ்வியலை நம் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகிறது. எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள ஐங்குறுநூற்றின் அமைந்துள்ள ஐந்திணைகளான மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை இவற்றின் சிறப்பு பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**ஐந்திணை அமைப்பு**

சங்க இலக்கியங்களைத் தமிழர்களின் பொக்கிஷம் என்றே கூறலாம். சங்க இலக்கியம் உணர்த்தும் மக்களின் வாழ்க்கை அவரவர் வாழும் சூழல் நோக்கில் அமைந்ததே. ஐந்நிலப்பாகுபாடு என்று உண்டானது என்பதை நாம் அறிவோம். ஆனால் சங்கத் தமிழர் இயற்கையோடு அமைந்த நிலப்பகுப்பைக் கண்டு வியப்புற்று அதன் இயல்பிற்கு ஏற்ற வகையில்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[1]

என்று தொல்காப்பியர் பாகுபடுத்திக் குறிப்பிட்டுள்ளார். மக்களின் சூழலுக்கு ஏற்ற வகையில் திணைகளின் அமைப்பு, மலை சூழ்ந்த பகுதி குறிஞ்சியாகவும், காடு மண்டிய வழி முல்லையாகவும், ஆறு ஓடிய வழி மருதமாகவும், கடல் பரந்த வெளி நெய்தலாகவும், பழந்தமிழர் பாகுபடுத்தி 'நன்னிலம்' என்று உலகிற்கு உணர்த்தினர். மேலும் பருவ மாறுபாட்டினால் முல்லையுங் குறிஞ்சியும் வளங்குறைந்து பாலையாகும் நிலையினை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிள் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உற்றுப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"[2]

என்கிறது சிலப்பதிகாரம். இவ்வாறு அமைந்த திணை அமைப்பு இயற்கை நில அமைப்பு ஒட்டியதாகும். இவ்வாறு பகுக்கப்பட்ட திணைகளுக்கென்று தனித்தனி கருப்பொருளை,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தியாழின் பகுதியொடு தொகைஇ"[3]

என்று தொல்காப்பியர் சுட்டுவார். இதனடிப்படையில் மக்கள், விலங்கு, பறவை, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என ஒவ்வொரு திணை மக்களும் தங்களின் உணவு, உடை, உறைவிடம், தொழில், அகவொழுக்கம், தெய்வ வழிபாடு, நம்பிக்கைகள், பக்கவழக்கங்கள் போன்ற வாழ்வியல் கூறுகளை இச்சூழல் அடிப்படையிலே அமைத்துக் கொண்டுள்ளனர். மலர்கள், இலைகள், காய்கள், செடிகொடிகள், மரங்கள், வயல்கள் போன்றவை வளம்பெற்று காணப்படுவத போல மக்களும் நோய்நொடி இல்லாமல் இயற்கையுடன் இயைந்து வாழ்ந்துள்ளனர்.

**குறிஞ்சித்திணை**

குறிஞ்சி என்பதற்கு "குறி, அடையாளம், காலம், அளவு, தடவை" என்று பொருள்படும். "நன்னிலத்தில் குறுகுதலான நிலம் எதுவெனில் மலையும் மலைசார்ந்த நிலமும் என்று காரணம் கண்டுரைப்பர்." குறிஞ்சிநில மக்கள் மலைகளைத் தங்கள் வாழிடமாகக் கொண்டு கல்லிடைக் குறிஞ்சி அமைத்ததனை,

"குன்றகத் ததுவே குழுமிளைச் சீறூர்"[4]

கொறுகச்சி முளைத்து அடர்ந்த பெரிய மலைப்பக்கத்தில் சிறுகுடி அடைந்திருந்ததை,

"எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி"[5]

என்று குறிஞ்சி நிலத்தாரின் இயற்கை சார்ந்த இருப்பிடச் சூழலை நற்றிணைப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. மேலும் "சிற்றூர்களுக்கு நாறபுறத்தும் முள்வேலியிட்டிருப்பர்", "குரம்பைகளுக்கு புல் வேய்வர்" என்றெல்லாம் குறிஞ்சித்திணையின் இருப்பிடங்களைச் சங்கப் பாக்கள் விளக்குகின்றன. மேலும் இத்திணை மக்கள் தேனும் திணையும் உண்டு விலங்குகளை வேட்டையாடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர்.

"புள்ளூற்றுக் கசிந்த தீம்தேன் கல் அளைக்
குறக் குறுமாீக்கள் உண்ட"[6]

என்று கல்லின் குழிகளில் வடிந்து நிற்கும் தேனை குறவர்களின் இளமகார் வழித்துண்பர். இவையன்றி திணையரிசியையும், கிழங்கினையும் உணவாகக் கொள்வர் (புறம். 143, ஐங். 208) மாவடுக்களைத் தொகுத்து வைத்துக்கொண்டு பயன்படுத்துவர் (ஐங். 213), உணவுப் பொருள் இல்லாத நாளில் யானை மருப்புகளை விலைக்கு விற்று உண்பர் (குறுந். 100) என்று குறிஞ்சி மக்களின் உணவு பற்றி சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. கார்காலத்தில் பல சால் உழுது வரகு விதைப்பர் (புறம். 120). மலையின் அருவிப் பக்கங்களில் ஐவகை நெல் விதைத்து விளைவிப்பர் (குறுந். 100) எனப் பயிர்த்தொழில் பற்றியும்,

"கோடு நுவையா கோள்வாய் நாயொடு
காடுதேர்ந்து அசைய வயமான் வேட்டு"[7]

என வேட்டைத் தொழில் பற்றியும் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். திணைப்புன வாழ்வு (நற். 13) சுனை விளையாட்டு (ஐங். 224), குன்றக் குரவை (அகம். 232), வேலன் வெறியாடல் (குறுந். 263) போல்வன அம்மலைவாழ் மக்களின் சமுதாய வாழ்வில் காணப்பெறும் தனிப்பெரும் சிறப்புகளாய் அமைகின்றன.

மக்களின் வாழ்க்கை நிலையை மட்டுமன்றி இந்நிலத்தில் இருக்கும் உயிரினங்கள், தாவரங்கள் பற்றியும் தெளிவுறக் காட்சிப்படுத்தியள்ளனர். சங்கப் புலவர்கள் குறிஞ்சியின் எப்பகுதியைக் கண்டாலும் காணற்கு கண்கள் போதாது என்பதாய் அழகிய காட்சிகளைக்

கொண்டதாய் விளங்குகின்றது. ஓங்கி நிற்கும் சந்தன (அகம். 242), வேங்கை (குறுந். 26) மரங்களும், அம்மரங்களில் தவழும் செடி கொடிகளும் (குறுந். 239) காணும் இடமெல்லாம் நிறைந்திருக்கும் குவளை, ஆம்பல், அனிச்சம், காந்தள் முதலிய பலவண்ண மலர்களும் (குறிஞ்சி. 68), புலிகள் (கலித். 49), யானைகள் (அகம். 88), மலையாறு (நற். 65), அருவிகள் (அகம். 172) எனக் குறிஞ்சி திணை பற்றி சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**முல்லைத்திணை**

முல்லைநிலம் காடும் காடு சார்ந்த பகுதிகளைக் கொண்டது. முல்லை நிலத்து வாழும் கோவலர் ஆநிரை மேய்த்து காத்தலும், காட்டின் இயற்கைப் பொருள்களை துய்த்தலும், பசுவின் பால் தயிரை உணவாகக் உட்கொள்ளுதலும் நாடிவரும் விருந்தினரை உபசரித்தலும், ஏறு தழுவுதலும் என நற் சமுதாய நெறியை மேற்கொண்டுள்ளனர் என்று சங்கப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. முல்லை தோன்றி, காயா, கொன்றை போன்ற மலர்கள் மலர்ந்து கானகம் அழகுறக் காட்சியளிக்கின்றது என்று கானகத்தின் செழிப்பை முல்லைப்பாட்டு குறிப்பிடுகின்றது.

“சென்னில மருங்கின் பல்மலர் தாஅய்ப்
புலம்தீர்ந்து இனிய ஆயின புறவே”[8]

மழை பொழிந்தமையால் பலவகை மலர்க் கூட்டங்களும் மலர்ந்து முல்லை நிலம் புதுமைப் பெற்றுக் காட்சியளிக்கின்றது எனும் இப்பாடலின் மூலம் முல்லை நிலம் மழைவளம் பெற்று செழித்தோங்கி இருந்து புலப்படுகிறது.

“பாம்புறை புற்றத்து ஈர்ம்புறம் குத்தி
மண்ணுடைக் கேட்ட அண்ணல் சாறு
உடனிலை வேட்கையின் மடநாகு தமீஇ
ஊர்வயின் பெயரும்”[9]

இவ்வாறு ஆயர்கள் புல்லாங்குழல் இசைத்துக் கொண்டு பசுவும் காளையுமாகப் பெயரும் கூட்டத்தை தங்கள் இல்லம் நோக்கி ஓட்டி வருகின்றனர்.

**மருதத்திணை**

மருதம் வயலும் வயல் சார்ந்த பகுதிகளைக் கொண்டது. "மருதத் தண்பனை மனத்துக்கினியது. வயல் சார்ந்த ஊர், இடந்தொறும் மக்கள் கலந்து ஒத்து அமைந்து வாழும் வாழ்க்கை, நல்ல வேளாண் தொழில் புரிந்து, தாளாராகித் தாக்காங்குக் கொடையாளராய் நின்று, வயைகம் வாழத்தாம் வளரும் தகையராய்ச் சிறந்து நல்ல வளமார்ந்த அரிசிச் சோறும் கனிகளும் அந்த விருந்தினருக்கு அளித்து சமுதாய வாழ்வையே செப்பம் செய்தவர்கள் மருதநில மக்கள். வற்றா வயல் வளத்தால் சுற்றத்தாரையும் மற்றவரையும் உண்பித்து கூடிவாழும் செம்மை நெறியை உணர்த்தி, அதன்வழி உலக நாகரிக வாழ்வு உருவாக்கி வாழ்ந்த மருதநில மக்களின் பண்பும், வாழ்வும், வளமும் வரலாற்றின் அடிப்படை மருதநிலம் வண்ண மலர்களும், முதலை, மீன் போன்ற உயிரினங்களைக் கொண்ட குளிர்ந்த நீர் நிலைகள் கொண்டு விளங்கியதனை,

"பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன்
முதலைப் போத்து முழுமீன் ஆரும்
தண்வரை ஊரன்"[10]

போன்ற பாடலடிகள் விளக்குகின்றன (அகம். 286), ஆமை (ஐங். 43), நீர்நாய் (அகம். 6), வாளைமீன் (பெரும்பாண். 287-8), நெல்லும் கரும்பும் செழித்த கழனிகள் (ஐங். 3), வயல் வரப்புகளை உறைவிடமாகக் கொள்ளும் நண்டுகளின் வாழ்க்கை (ஐங். 21) போன்றவற்றையெல்லாம் புலவர்கள் தங்கள் சொல்லோவியங்களால் சங்க இலக்கியத்துள் படைத்துள்ளனர். ஆற்றில் பெருக்கெடுத்தோடும் வெள்ளக் காட்சியினை,

"புனல்ஆடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்
வேட மூதூர் ஊரன்"[11]

எனும் பாடலடி குறிப்பிடுகின்றது.

காஞ்சி, மருது, கமுகு முதலா மரங்களும் வயலை, பிரப்பங்கொடி முதலான கொடிகளும் மருதநிலத்தை எழிலூட்டும் பசுமைக் காட்சிகளாகத் திகழ்கின்றன. முதலை, எருமை, குருகு, மயில், நாரை போன்றவை உயிரினச் சூழலை நமக்கு தெளிவுறுத்துகின்றன. குளம், ஏரி, ஆறு, பொய்கை

போன்ற நீர்நிலைகள் கரும்பு, நெல் போன்ற பயிரினங்கள் அந்நிலத்தின் வளமையைப் புலப்படுத்துகின்றன.

**நெய்தல்**

கடல் மற்றும் கடற்கரைப் பகுதி, கடல்படு பொருட்கள், நாட்டு வாணிப வளனைப் பெருக்கும் பரதவர் வாழ்க்கை போன்றவற்றைக் கொண்டதே நெய்தல் நிலம், கடல் மேல் கலம் செலுத்தி வாணிபம் செய்யும் செல்வ நிலை, உப்புக்கும், மீனுக்கும் நாள் முழுக்க உழைக்கும் ஏழை மக்களின் நிலை என நெய்தல் நிலம் சார்ந்த செய்திகள் பல சங்க இலக்கியத்தில் உள.

"உலகு கிளர்ந்தன்ன உருக்கெழு வங்கம்
புலவுத்திரை பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசொல் இயற்கை அங்கூழ் ஆட்டக்
கோமயர் திணிமணல் அகன்றுறை நீகான்
மாடஒள்ளெரி மருங்கறிந்து ஒய்ய"[12]

கடல்நீரை கிழித்துக்கொண்டு செல்லும் பெரிய அளவிலான கப்பல், கடற்பயணம், கலங்கரை விளக்கம் என கடற்கரை, உப்பங்கழி ஆகியவற்றுக்கும் அம்பால் விரிந்து ஆழ்ந்து விளங்கும் கடல ◌ வாழ்வு பற்றி சங்கப் புலவர்கள் உணர்ந்திருப்பதை இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது. "இவை போன்றே கடற்கரை பற்றியும் துறைமுகங்களில் நடைபெற்ற வாணிகம் பற்றியும் விரிவான விளக்கத்தைப் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் காணலாம்."

புன்னை மரநிழலில் இறாமீன் குவியலை உலர்த்துதல், மீன்களை இரையாக உண்ணும் குருவி, ஈங்கை, புன மல்லிகை, தாழை போன்றவை மணல் திடல்களில் பூத்துக் கிடத்தல் பரதவச் சிறார்கள் படகேறிச் சென்று சுறா மீன்களையும் பிற மீன்களையும் கொணர்ந்து வருதல், ஞாழல் மலர்களுடன் நண்டு விளையாடும் காட்சி, கடற்கரை சோலையில் மலர்ந்திருக்கும் தாழையும், புன்னையும், உப்பு விளைத்தல் என நெய்தல் நிலச்சூழல் பல, சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன.

**பாலைத்திணை**

வளமிக்க குறிஞ்சியும் முல்லையும் வறண்டு வெம்மையின் வறட்சி தாளாமல் வளமற்ற நிலமாக காட்சியளித்ததை, பாலை எனச் சுட்டினர். இந்நிலத்தின் கதிரவனின் கடுவெப்பம் தாளாமல் பயிரினமும் உயிரினமும் தன்னிலை மாறின. கடுங்கோடயின் கொடுமையால் மலையின் கவின் அழிந்த பசுமையும் ஈரப்பசையும் அற்று பாழ்நிலமாய் காணப்படுகிறது. கதிரவனின் வெம்மையால் மரலும் வாழையும் வாடி வதங்கின. பெரிய மரங்களெல்லாம் இலைகளை உதிர்த்து நிலத்துக் காணப்பட்டன. “பறவைகளும் விலங்குகளும் நீர்வேங்கையாலும் பசியாலும் வன்புறுகின்றன. “நீர்வற்றிய சுனையும் தழையொடு வாடிய மலரும், வீழ்ந்து கிடக்கும் கொடியும் வாடிய தளிரும் என இயற்கை தோங்கிய நிலம் வளமற்று பாலையாகிப் போன காட்சிகளை சங்க புலவர்கள் நம் கண்முன் நிறுத்துகின்றனர்.

**முடிவுரை**

ஐங்குறுநூற்றில் அமைந்துள்ள ஐந்திணைகளின் சிறப்பு, ஐந்திணை மக்களின் சிறப்பு, இயற்கை சிறப்பு, புலவர்களின் சிறப்பு இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்.பொருள். நூ. 5
2. சிலம்புகாடுகாண் காதை, பக். 64-66
3. தொல்.பொருள். நூ. 18
4. நற். பா. 95:7
5. மேலது., பா. 156:7
6. மேலது., பா. 168:34
7. மேலது., பா. 168:3,4
8. ஐங். பா. 495
9. அகம். பா. 64
10. ஐங். பா. 2
11. மேலது., பா. 15
12. அகம். பா. 255

**துணைநின்ற நூல்கள்**

1. மோகனதாஸ் ராமசாமி : **ஐங்குறுநூறு**
கலைஞன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராயநகர்
சென்னை-600 017

2. இளம்பூரணர். : **தொல்காப்பியம் பொருளதிகாரம்**
பாவாணர் கணினி
2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை-17

3. உ.வே.சா. டாக்டர். : **சிலப்பதிகாரம்**
உ.வே.சா. நூல் நிலையம்
2, அருண்டேல் கடற்கரை சாலை
பெசன்ட் நகர்
சென்னை-600 090

4. ச.வே. சுப்பிரமணியன். : **சங்க இலக்கியம் மூலம் முழுவதும்**
முனைவர். (ப.தி.), மணிவாசகர் பதிப்பகம்